கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 22/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி -2 பாலமுருகன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 22.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி ராமலிங்கம் என்பவர் எனது தந்தை ஆவார். இவ்வழக்கை வடிவேல் என்பவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வடிவேல் என்பவர் அவருடைய சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தந்தை தாக்கல் செய்துள்ள வழக்கான அ.வ.எண்.228/2017 அவர் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தந்தையும், நானும் ஒரே குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு நியாபகம் இல்லை. மேற்படி வழக்கு சொத்தை எப்போது வாங்கினோம் என்றால் 2012 ம் வருடம் வாங்கினோம். மேற்படி வழக்கு சொத்தில் எப்போது கட்டிடம் கட்டினோம் என்றால் சரியாக நியாபகம் இல்லை. சொத்தை வாங்கிய இரண்டு வருடங்களில் கட்டிடம் கட்டினோம்.

2. மேற்படி க,ட்டிடம் கட்டிக்கொண்டிருக்கும் போது தான் எனக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கட்டிடத்தை கட்டி முடித்து பின்பு சுமார் 4 முதல் 5 வருடங்களுக்கு பிறகு அச்சொத்தை வாதி கிரையம் பெற்றார். வாதி மேற்படி சொத்தை எப்போது கிரையம் பெற்றார் என்றால் மேற்சொன்ன வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக கிரையம் பெற்றார். மேற்படி சொத்தை வாதி கிரையம் பெற்ற உடன் நிலத்தை அளந்தாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நிலத்தை கிரையம் பெற்ற சமயத்தில் இருபுறங்களிலும் கட்டிடம் இருநதன. வாதி மேற்படி சொத்தை கிரையம் பெற்ற உடன் நிலத்தை அளக்க முயற்சி செய்த போது எனது தந்தையான 1ம் பிரதிவாதி நிலத்தை அளக்க கூடாது என மேதகு உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு ஒன்றை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரசணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court, read over and interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**